**‘செயல்... அதுவே சிறந்த சொல்’ என்பார்கள். ஆழமான சிந்தனைக்குப் பின் வருவதே ஆற்றல்மிகு செயல். பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் சிந்தித்துச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் உருவாக்கிச் சென்ற கட்டமைப்புகள் குறித்து வாரந்தோறும் இங்கு...**



# 21 இடம் பொருள் கலைஞர்

# சிட்கோ தொழிற்பேட்டைகள்

## தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான எரிபொருள்!









‘உடல் உழைப்புக்கான தொழில்களின் மூலம் கிடைக்கும் வரும்படி சோற்றுக்குப் போதியதாய் இருந்தால் உடலுரம், மனவுரம் பெற்றுவிடுவான் என்றும், உணவு, தேவைக்கு மேலிருந்தால் சரிவரத் தொழிலுக்கு வரமாட்டான் என்றும் கருதியே, உணவுக்கே போதாமல் இருக்கும்படியாகப் பார்த்து, குடிசைத் தொழில்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன’ என்றார் தந்தை பெரியார்.

குடிசைத் தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் கைக்கும் வாய்க்குமே பற்றாக்குறையாக இருக்கும்போது, எங்கிருந்து முதலீட்டைப் பெருக்கி, ஒருவரால் சுயமாகத் தொழில்முனைய முடியும்?

இந்தக் காரணத்துக்காகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இயந்திரமயமாக்கலை வரவேற்றார். அதன் மூலம் கிடைக்கக் கூடிய பலன்கள் குறித்தும் அவர் இப்படிக் கூறினார்: “மனிதரின் உழைப்பைக் குறைத்து ஓய்வுநேரத்தை அதிகரிக்கச் செய்வதில்தான் மனித வாழ்வின் முன்னேற்றம் இருக்கிறது. இந்த முன்னேற்றத்துக்கு இயந்திரம்தான் உதவி வருகிறதே தவிர, குடிசைத் தொழில்கள் அல்ல”.

பெரியார், அண்ணா வழியில் பயணித்த கலைஞரும் அறிவியல் மனப்பான்மையுடன், இயந்திரமய தொழிற்சாலைகளை ஊக்குவித்து, தமிழ்நாட்டை நவீனத்தின் பாதையில் நடைபோட வைத்தார். அதன் முதல் வித்துதான் 1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **‘சிட்கோ’** எனும் **‘சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்’**.

### ஆதார ஊற்றான தொழிற்பேட்டைகள்

தொழில்முனைவோர் மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளில் தமிழ்நாடு, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான நீண்ட வரலாற்றைக் கொண்ட மாநிலமாகும். ஜவுளி, உலோக வேலைகள், மட்பாண்டங்கள், கப்பல் கட்டுமானம் போன்ற தொழில்களுக்குப் பிரபலமானது. இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு மூன்றாவது இடம் வகிக்கிறது.



தமிழ்நாடு அரசின் தரவுகளின்படி, 2015-2016 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி, தமிழ்நாட்டில் சுமார் 50 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் சுமார் 52 சதவிகிதத்துக்கும் மேலானவை ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன.

இந்த நிறுவனங்களில் பெரும்பாலானவை தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், வாகன உதிரிபாகங்கள், உலோக வார்ப்புகள், பம்புகள் மற்றும் ஆயத்த ஆடைகள் போன்ற உற்பத்தித் துறைகளைச் சார்ந்திருப்பதால், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன.

70-களில் முத்தமிழறிஞர் **‘தொழிற்பேட்டைகள்’** என்றொரு கட்டமைப்பை மட்டும் ஏற்படுத்தாமல் போயிருந்தால், மேற்கண்ட சாதனைகள் சாத்தியமாகாமல் போயிருக்கும்.

### சிறுதொழில்களுக்கு இடையறாத ஆதரவு

தொழிற்பேட்டைகளை உருவாக்கி, மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குதல், தொழிற்கூடங்கள் கட்டுதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டுதல், அரசு உதவியுடன் தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல், சிறுதொழில் நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டு விற்பனை உதவித் திட்டம், ஏற்றுமதி உதவித் திட்டம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதுதான் இந்தக் கழகத்தின் அடிப்படை நோக்கங்களாக இருக்கின்றன.

சிட்கோ தொடங்கப்பட்ட போது, இங்குள்ள தொழிற்பேட்டைகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு, 15 சதவிகித மாநில முதலீட்டு மானியமும், விற்பனை வரியை வட்டியில்லாமல் தள்ளிக் கட்டக்கூடிய (ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு) சலுகையும் வழங்கப்பட்டன. மேலும், மகளிர் தொழில்முனைவோருக்கு 30 சதவிகிதம் வரையிலும், முன்னாள் ராணுவ வீரர்களுக்கு 10 சதவிகிதம் வரையிலும் தொழில்மனைகள் ஒதுக்கீடுகளில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

இன்று மாநிலம் முழுக்க 121 தொழிற்பேட்டைகள் சிட்கோவின் கீழ் உள்ளன. 1999-ஆம் ஆண்டு கணக்குப்படி, அன்றைய காலகட்டத்தில் 77 தொழிற்பேட்டைகள் இருந்தன. அவற்றில் 4 மட்டுமே தனியார் தொழிற்பேட்டைகள். ஆனால் இன்று 80 தனியார் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன என்றால், அந்த அளவுக்கு சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கு தி.மு.கழகத்தின் ஆட்சிக் காலங்களில் வழங்கப்பட்ட இடையறாத ஆதரவுதான் காரணம்.

### மாதந்தோறும் புதிய தொழில்

இந்தத் தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்ட சமயம், 1971- ஆம் ஆண்டு சென்னை மணலி பகுதியில் தொழிற்சாலை ஒன்றின் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்த கலைஞர், இவ்வாறு பேசினார்:

“இந்த மாநிலத்தில் உள்ள நாம், மக்கள் வாழ்வில் செழிப்பு மிகுந்தோங்க, தொழில் வளர்ச்சியையே நம்பியிருக்கிறோம்.

நமது மாநிலத்தில் தங்கமோ, பூமிக்கடியில் எண்ணெய்யோ, பிற உயர் ரகக் கனிமப் பொருட்களோ கிடைப்பதில்லை. ஆனால், இங்கே திறமையும், பிறர் கண்டு பொறாமைப்படத்தக்க அளவுக்கு வாய்ப்புகளும் ஏராளமாக உள்ளன. மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு எளிதான வகையில் நம்மிடம் நல்ல துறைமுகங்கள் உள்ளன. இவற்றின் மூலம் நாம் ஏற்றுமதியினையும் பெருக்க முடியும்.

தமிழ்நாட்டில் சாலை வசதியும், போக்குவரத்து வசதிகளும் சிறப்புடன் விளங்குகின்றன. இவை எல்லாவற்றையும்விட இந்த மாநிலத்தில் தொழில் நுணுக்க அறிவு படைத்தோரின் உதவி ஏராளமாகக் கிடைக்கும். சிறப்பான ஆற்றலுடன் இவையனைத்தையும் ஒருசேரத் திரட்டி இயல்பான தொழில் நிபுணத் தன்மையுடன் சேர்ந்து பணியாற்றினால், தமிழ்நாட்டைச் செழிப்புள்ளதாக்க நமக்குத் தங்கமோ, பூமிக்கடியில் உள்ள எண்ணெய்யோ தேவைப்படாது.

இங்குக் குழுமியுள்ள ஆற்றலும் செயல்திறனும் மிக்க தொழில் அதிபர்களின் மனமுவந்த ஒத்துழைப்புடன், ஒவ்வொரு மாதத்துக்கும் புதிய பெருந்தொழில் ஒன்றைத் தொடங்குவது என்ற குறிக்கோளை முன்வைத்துச் செயல்பட முடியும் என்று நம்புகிறேன்!”

**70–களில் முத்தமிழறிஞர் ‘தொழிற்பேட்டைகள்’ என்றொரு கட்டமைப்பை மட்டும் ஏற்படுத்தாமல் போயிருந்தால், மேற்கண்ட சாதனைகள் சாத்தியமாகாமல் போயிருக்கும்.**

அந்த நம்பிக்கையை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதன் மூலமும், புதிய முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமும், முன்னெடுத்துச் செல்கிறது நம் கழக அரசு. கலைஞர் வித்திட்ட அரசு.

**...வலம் வருவோம்**

## கலைஞரின் ஆலோசனை!



1970-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர், முதலமைச்சராக ஏழு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள வளர்ச்சிகளைக் கண்டு வந்தார். அந்தப் பயண அனுபவங்களை சென்னை வானொலியில் மக்களுடன் பகிர்ந்துகொண்டார். அதில், தான் வெளிநாட்டில் பார்த்ததுபோல, நம்முடைய நாட்டிலும் அஞ்சல் அட்டைகளில் நமது பண்பாட்டு அடையாளங்களை, சுற்றுலா இடங்களை அச்சிட்டு அளிக்க வேண்டும். அதன்மூலம் மக்களிடம் நமது பெருமையைக் கூற முடியும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என விளக்கியதுடன் இது தொடர்பாக பிரதமருக்கு கடிதம் எழுதியதாகவும் குறிப்பிட்டார்.

அத்தகைய அஞ்சல் அட்டைகள் 1940-கள் முதலே இந்தியாவில் ஒரு சில இடங்களில் இருந்தன என்றாலும், கலைஞர் குறிப்பிட்டபடியான, அஞ்சல் அட்டைகள் 80-களுக்குப் பிறகே வரத் தொடங்கின. இப்படி முன்னோக்கிச் சிந்தித்து அஞ்சல் துறைக்கு ஆலோசனை சொன்னவர் கலைஞர். அவரது மறைவின் போது அவர் நினைவாக, ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த அஞ்சல் தலைச் சேகரிப்பாளர் குழு ஒன்று கலைஞர் படம் போட்ட அஞ்சல் உறை ஒன்றை வெளியிட்டது.

## :ப்ளாஷ்பேக்



### பேரனுக்குப் பெயர்!

தி.மு.கழகம் ஆட்சியில் இல்லாத போது, கழகத்தில் இணைந்தேன். ‘சட்ட எரிப்புப் போராட்டம்’, ‘இலங்கைத் தமிழருக்கான போராட்டம்’ எனப் பல போராட்டங்களில் பங்கேற்று, சிறைவாசமும் அனுபவித்திருக்கிறேன். 1992-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், குமாரபாளையத்துக்கு வருகை தந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் என் அன்புப் பேரனை அழைத்துச் சென்று பெயர் வைக்குமாறு கேட்டுக் கொண்டேன். **‘தமிழரசு’** என்று பெயர் சூட்டி வாழ்த்தினார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



இராமசாமி

**–ஆர்.இராமசாமி,**
**வார்டு செயலாளர், குமாரபாளையம்,**
**நாமக்கல் மேற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கருகிய பந்தல்!

**1993-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், கழகத்தின் ஏழாவது மாநில மாநாடு, கோவையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. பத்து லட்சம் பேர் அமரக்கூடிய வகையில், மிகப் பிரமாண்டமான பந்தல்கள் அமைக்கப்பட்டன. இந்த நிலையில், மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள், விஷமிகள் சிலர் பந்தலைத் தீ வைத்துக் கொளுத்தினர். மாநாட்டின் முகப்பும் மேடையும் தவிர, எதுவும் மிஞ்சவில்லை. ஆனாலும், மாநாடு நிறுத்தப்படவில்லை. அதே இடத்தில், அதே நாட்களில் 20 லட்சம் பேர் பங்கேற்ற பேரணி, பொதுக் கூட்டம் நடைபெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 142




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131